# யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

## பருத்தித்துறை

நவோதய பாடசாலை **D.S.D School**

## பரிசளிப்பு விழா 2007 / 2008

M.G..H.S. ICT Unit

## நிறுவன நோக்கக் கூற்று

“ தரமான முகாமைத்துவத்தின் ஊடாக
உன்னத கல்வியை நோக்கி”

## நிறுவன பணிக்கூற்று

“ எமது பாடசாலை மாணவர்கள் முழுமையான வினையாற்றலை எய்தும் பொருட்டு பாடசாலையின் வளங்களில் உச்சப் பயன்பாட்டின் ஊடாகத் தர்மான கல்விச் சூழலை உருவாக்கி, நவீன உலகில் போட்டியிடும் வல்லமையும். மனித விழுமியங்களும் ஆளுமையும், ஜனநாயகப் பொறுப்பும் மிக்க மகிழ்ச்சிகரமான மாணவச் சமூகத்தை உருவாக்குவதன் மூலம் சர்வதேசத் தரத்தினை எய்துதல்.”

# யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
## பருத்தித்துறை

# (Navodaya School)

## வருடாந்த பரிசளிப்பு விழா அறிக்கை 2007 / 2008

கடந்த வருடம் 185 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்த எம் கல்வித் தாயின் பெருமையினை பல சாதனைகள் மூலம் எம் மாணவர்கள் மேலும் மெருகூட்டிய நிலையில் இவ் வருடப் பரிசளிப்பு விழா அறிக்கையினை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன். பல இடர்பாடுகளை எதிர் கொண்ட வேளையிலும் கடந்த வருடம் க.பொ.த.(சா/த), (உ/த) பெறுபேற்றில் உயர் பெறுமானத்தைப் பெற்றுள்ள நிலையில் இன்றைய பரிசளிப்பு விழா நடைபெறுவது மகிழ்ச்சியான விடயமாகும். எம் பாடசாலையின் பாரம்பரியத்திற்கேற்ப எம் பழைய மாணவி திருவாட்டி கணேஸ் பரமேஸ்வரி தம் துணைவர் யாழ் மாவட்ட அரச அதிபர் உயர்திரு கணேஸ் அவர்களுடன் இந் நிகழ்வில் கலந்து எம்மைக் கௌரவப்படுத்தி மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிப்பமையிட்டு எம் பாடசாலை சமூகத்துடன் நாமும் பெருமையடைகின்றோம்.

இன்றைய விழா சிறப்புற எமக்குப் பல வழிகளிலும் எம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கங்கள் தம் பங்களிப்பினையும் ஆலோசனைகளையும் வழங்கியுள்ளன. மாணவர்களுக்குரிய வருடாந்த பரிசளிப்பு நிதியினை அவுஸ்ரே–லியா பழைய மாணவர் சங்கமும் கனடா பழைய மாணவர் சங்கமும் இணைந்து வழங்குகின்றன.

## பாடசாலை முகாமைத்துவம்

### மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| தரம் | 6 – 11 | 601 |
| தரம் | 12 – 13 | 404 |

### ஆசிரியர் தொகை

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 28 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 15 |
| தொண்டர் ஆசிரியர்கள் | 02 |
| தற்காலிக இணைப்பிலுள்ளவர்கள் | 01 |
| டிப்ளோமா ஆசிரியர்கள் | 05 |
| கல்வி சாரா ஆளணியினர் | 05 |

**கல்வி சாரா ஆளணித் தேவை 03**

எமது பாடசாலையில் 01.05.1986 முதல் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராக இணைந்து 1997 முதல் பிரிவுத் தலைவராக் நியமனம் பெற்று எம் பாடசாலையின் கணிதத் துறையின் வளர்ச்சிக்கு ஆணி வேராக செயற்பட்ட திருவாட்டி சோதிமலர் தியாகலிங்கம் கடந்த வருடம் பெப்ரவரி மாதம் தன் சுய விருப்பின் பேரில் ஓய்வு பெற்றுள்ளார். அவர் ஆற்றிய கல்வி முகாமைத்துவ சேவைகளை எம் பாடசாலை சமூகம் என்றும் நினைவில் கொள்ளும். அவர் தன் ஓய்வு காலத்தில் கொழும்பு பழைய மாணவர் சங்கத்துடன இணைந்து எமக்கு உதவி புரிவது மகிழ்ச்சியைத் தருகின்றது. 25.05.1990 முதல் தொழில்நுட்ப ஆசிரியராக முதல் நியமனம் பெற்று பட்டதாரி ஆசிரியராக உள்வாங்கப்பட்ட திருமதி.மகாலஷ்சுமி ஜெயக்குமார் 17 வருட சேவையின் பின் தன் சுயவிருப்பின் பேரில் யா/ஞானாசாரியர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். பட்டதாரி பயிலுனராக நியமனம் பெற்று ஒன்றரை வருட காலம் எம்முடன் பணியாற்றிய செல்வி.சந்திரிக்கா சந்திரகுமார்

திருமணத்தை அடுத்து பின் வெளிநாடு சென்றுள்ளார். இவர்கள் எதிர்காலத்தில் சிறப்புற வாழ எம் வாழ்த்துக்கள்.

செல்வி.மீரா பாலச்சந்திரன், திருமதி.வதனி பிறேமகோணேஸ்வரன் எம் பாடசாலையில் முகாமைத்துவ உதவியாளர்களாக இரு வருடங்கள் கடமையாற்றி கடந்த வருடம் ஆனி மாதம் முதல் குடத்தனை அ.த.க. வித்தியாசாலையில் ஆசிரியராக நியமனத்தைப் பெற்றுள்ளார்கள். எமது பாடசாலையில் நிதி முகாமைத்துவம் , காரியாலயம் முகாமைத்துவத்தின் சிறப்புக்கும் ஒழுங்கமைப்புக்கும் பக்க பலமாக விளங்கிய இவர்கள் இருவரதும் வெற்றிடம் இதுவரை நிரப்பப்படவில்லை.

எமது பழைய மாணவி செல்வி விஜிதா தங்கவேலாயுதம்(கலை சிறப்புப் பட்டதாரி) யா/தேவரையாளி இந்துக் கல்லூரியிலிருந்து இடமாற்றம் பெற்று எம்முடன் இணைந்துள்ளார்.

எமது பாடசாலையில் -கல்வி பயிலும் அனைத்து மாணவர்களினதும் தேர்ச்சியை முதன்மைப்படுத்தி கற்றல் கணிப்பீடு சுற்று நிருபத்திற்கேற்ப கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு மாணவர்களது அடைவு மட்டம் வலுப்படுத்தப்படுகின்றது. உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கும் எம் பாடசாலையின் கற்றல் கற்பித்தல் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பல தடைகள் காலத்துக்கு காலம் மாற்றம் ஏற்படுத்திய போதும் வெற்றி நடைபோட்ட எம் அன்னையின் செயற்பாடுகளில் சுனாமியின் சீற்றத்திற்கு பின்னர் பாடசாலையின் அனுமதி குறைவடைந்த நிலையில் பாடசாலை முகாமைச்செயற்பாடுகளிலும் உயர் பாரம்பரியங்கள் பண்பாடுகளை கருத்தில் கொண்ட பெற்றோர்கள் இவ்வருடம் அதிகமாக தம் பிள்ளைகளை தரம் 6, தரம் 12 வகுப்புகளுக்கு அனுமதிக்க முன்வந்தமையையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

பெற்றோர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற முகாமைக்குழு விற்கு எதிர்காலத்திலும் எம் ஆசிரியர் சிறந்த ஒத்துழைப்பை வழங்குவார்கள். தரம் 6 தொடக்கம் 13 வரை கணிப்பீட்டுக் கருவிகள் மூலம் மேற்கொள்ளப்படும் கணிப்பீடுகளால் மாணவர்களது ஆற்றல் மேம்படுத்தப்பட்டு மாணவர் தம் திறமைகளை வெளிக்கொணர சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது.

## பௌதீக வளம்

மாணவரின் தொகைக்கேற்ப மகிழ்ச்சிகரமான கற்றலுக்குரிய நிலையில் எம் வகுப்புகள் மாற்றம் செய்யப்பட வில்லை. புதிய கல்விச் சீர்திருத்தம் அமுலாக்கப்பட்டு சிறப்பான பயனுறுதி வாய்ந்த கற்றற் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் மாணவரதுஆக்கங்களைப் பேணக்கூடிய காட்சிப்படுத்தக்கூடிய வகையில் வகுப்புக்கள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். போரின் சிதைவுகளை நாளாந்தம் நோக்கிய நிலையில் எம் சிறார்கள் கல்விபயிலுகின்றனர். சுனாமியின் தாக்கத்திற்கு பின் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் எம் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டன. அவற்றிற்கு எம் முதன்மை விருந்தினர் பொறுப்பாக இருந்து வழிநடத்துவது பெருமைக்குரிய விடயமாகும். எம் பாடசாலையை பொறுப்பேற்ற SDC நிறுவனம் இருமாடிக் கட்டடங்கள், சுற்றுமதில் விளையாட்டுப் பூங்கா என்பன அமைக்க சம்மதமளித்தது. எனினும் நாம் இன்று ஒன்றுகூடிய இம் மண்டபப் புனரமைப்புடன் தம் பணியை நிறுத்தியுள்ளது. யாழ் மக்களின் புனர்வாழ்வுக்கு பொறுப்பாகவுள்ள மதிப்பிற்குரிய அரச அதிபர் எம் பாடசாலையின் நிலைப்பாட்டை உணர்ந்து பௌதீகத் தேவைகளை நிறைவு செய்ய உதவுவார் என்பது எம் நம்பிக்கை.

எமது மாணவர்களின் தொகைக்கேற்ப

வகுப்புத்தேவை 37

நிரந்தர வகுப்புக்கள் 26

ஏனைய பாடசாலைகளைப் போன்று செயற்பாட்டறை அழகியல் கூடம் , களஞ்சிய அறை என்பனவும் எம் பாடசாலைக்கு கிடைக்க வேண்டும். தொலை தூரத்திலிருந்து வந்து கல்வி பயிலும் மாணவர்களது துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தப்படுவதற்கு தகுந்த வகையில் துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் கட்டாயம் எமக்கு அமைக்கப்படல் வேண்டும். வளங்கள் அற்ற நிலையிலும் கடந்த வருடம் க.பொ.த (உ/த) ,(சா/த) உயர் பெறுபேறு எம் மாணவர்களினதும் ஆசிரியர்களதும் வினைத்திறன் மிக்க செயற்பாட்டை எடுத்தியம்புகின்றது.

## கல்விச் செயற்பாடு

√ தெரிவு செய்யப்பட்ட பாடங்களை ஆங்கில மொழி மூலம் க்ற்கும் மாணவர் இம் முறை முதல் முறையாக க.பொ.த(சா.த) பரீட்சைக்குதயார்படுத்தப்பட்டுள்ளனர்.

√ தரம் 6, தரம் 7, தரம் 10. தரம் 11 தரங்களின் செயற்பாட்டு ரீதியாக கல்வி முதன்மைப்படுத்தப்படுகின்றது.

√ ஆசிரியர்களின் வகுப்பறை கற்றல் கற்பித்தலில் **5E** முறை புகுத்தப்பட்டு தர உறுதிப்பாடும் பேணப்படுகின்றது.

√ ஆசிரியர் பாட ரீதியாக தர வட்டங்களை அமைத்துச் செயற்படுவதன் மூலம் பாடசாலையின் செயற்பாடுகளை தரமாக்கு மதேவேளை தமது தொழில் வாழ்க்கையையும் சிறப்படையச் செய்கின்றனர்.

மாணவர்களது வகுப்பறைச் செயற்பாடுகளில் உயர் மட்டத்தை அடையும் வகையில் உயர் கல்விச் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. அதே போன்று ஆசிரியரது வாண்மை விருத் திக்கும் பாடசாலை மட்டத்திலே உயர் மட்டச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

காலைப் பிரார்த்தனையின் பின் குறிப்பிட்ட சில நாட்களில் கற்றல் செயற்பாடுகளை ஆங்கிலத்தில் நடத்துவதன் மூலம் மாணவரது ஆங்கில தேர்ச்சி மட்டம் மேம்படுத்தப்படு கின்றது.

## சமயக் கல்வி

இந்து, கிறிஸ்தவ மன்றங்கள் மாணவர் சமய விழுமி யங்கள் அனுட்டானங்கள் விழாக்கள் என்பவற்றை பின்பற்ற துணை செய்கின்றன. காலைப் பிராத்தனையின் பின் தமிழ் ஆங்கில மொழி மூலமான பொது விடயங்கள், பத்திரிகைச் செய்திகள். தகவல்கள் என்பவற்றை நாளாந்தம் எம் பள்ளிச் சிறார்கள் அறியும் வகையிலான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. திறன்களை வளர்க்கும் வகையில் பல்வேறு விதமான போட்டிகள்நடத்தப்பட்டு நவராத்திரி, கிறிஸ்மஸ் காலங்களில் பரிசில்கள் வழங்கி சிறந்த சமயவிழுமியங் களைப் பேணும் மாணவர்களாக ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

## பொதுக் கல்வி

தரம் 6 – 13 வரை தாய் மொழி மூலமும், தெரிவு செய்யப்பட்ட பாடங்களை ஆங்கிலமொழி மூலம் தரம் 11 வரை கற்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. வரலாறு, புவியியல் போன்ற

பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்பிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களது தேவையுள்ளது.

கல்வி யமைச்சின் பணிப்புரைக் கிணங்க கடந்த வருடம் 07.07.2007 முதல் 14.07.2007 வரை நவோதய வாரம் கொண்டாடப்பட்டு பாடசாலை பெற்றோர் பழைய மாணவர்களி னால் சிரமதானம் மூலம் துப்பரவு செய்து கற்றலுக்குரிய சூழல் தோற்றுவிக்கப்பட்டது. நவோதய பாடசாலை வேலைத்திட்டம் " எமது பணிகள் தேசத்தின் முன்னேற்றத்திற்கே " என்ற தலைப்புக்கு இணங்க பாடசாலை குறிக்கோளை அடையக்கூடிய வகையில் முன்னெடுக்கப்பட்டது.

## 2007 ஆம் ஆண்டு க.பொ.த (சா.த) பெறுபேறு

கடந்த வருடம் நடைபெற்ற பரீட்சையில் 93% மாணவர் க.பொ.த.உயர்தரத்தில் கற்கும் தகைமை பெற்றுள்ளனர்.

| | |
|---|---|
| தோற்றியோர் | 110 |
| சித்தியடைந்தோர் | 102 |
| சித்தி வீதம் | 93% |

இது கடந்த வருடத்தை விட 10% அதிகரிப்பு ஆகும்.

## உயர் பெறுபேறு பெற்றோர் விபரம்

| | | |
|---|---|---|
| 10A | 11 | மாணவர்கள் |
| 9A | 10 | மாணவர்கள் |
| 8A | 7 | மாணவர்கள் |
| 7A | 7 | மாணவர்கள் |
| 6A | 2 | மாணவர்கள் |
| 5A | 5 | மாணவர்கள் |

## 10 பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்றவர்கள் விபரம்

1. செல்வி.யோகல்யா ஐயாத்துரை
2. செல்வி.கோபிகா கந்தசாமிக்குருக்கள்
3. செல்வி.கோபிகா மயோன்ராஜ்
4. செல்வி.பபிகா குணராஜா
5. செல்வி.சுகன்ஜா இராஜகுலேந்திரன்
6. செல்வி.பிரதீபா தங்கராஜா
7. செல்வி.தர்சிகா தர்மதயாளன்
8. செல்வி.கேமசிந்துஜா கேதீஸ்வரன்
9. செல்வி.சுயனி கிருபாகரன்
10. செல்வி.அபர்ணா செல்வேந்திரராஜா
11. செல்வி.சோபிகா ஸ்ரீமுருகமூர்த்தி

## 9 பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றவர்கள் விபரம்

1. செல்வி.பானுஸா கென்லி
2. செல்வி.றம்யா அச்சுதானந்தம்
3. செல்வி.கௌதமி கிருஸ்ணபாலன்
4. செல்வி.பிரசாந்தினி நாகேந்திரன்
5. செல்வி.பாமா இராஜரட்ணம்
6. செல்வி. சுபாங்கி சுரேந்திரன்
7. செல்வி.சன்சியா ஆனந்தமூர்த்தி
8. .செல்வி.ஜெசிதா ஜெயவீரசிங்கம்
9. செல்வி.லாவன்யா செல்வராஜ்
10. செல்வி.மெக்சிபாரதா சிவசேகரம்

## 2007 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பெறுபேறு

| விபரம் | கணிதம் | உயிரி. | வர். | கலை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 09 | 20 | 08 | 51 | 88 |
| சித்தியடைந் தோர் | 05 | 09 | 07 | 46 | 67 |
| பல்கலைக் கழக அனுமதி | 05 | 09 | 07 | 46 | 67 |

## 2007 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரத்தில் உயர் பெறுபேறு பெற்றோர் விபரம்

| | |
|---|---|
| 3A | 4 மாணவர்கள் |
| 2A B | 4 மாணவர்கள் |
| 2A C | 1 மாணவி |
| A 2B | 3 மாணவர்கள் |
| ABC | 4 மாணவர்கள் |

# 3A பெற்றவர்கள்

01. செல்வி.திருமகள் துரைலிங்கம் (வர்த்தகம்)
02. செல்வி.தர்சினி இராஜதுரை (கலை)
03. செல்வி.கோகிலவாணி
இரத்தினசபாபதிக்குருக்கள் ( கலை)
04. செல்வி.இராஜரங்கா இராஜரட்ணம் (கலை)

# 2A B பெற்றவர்கள்

01. செல்வி.நிரஞ்சினி பரமானந்தராஜா ( கலை)
02. செல்வி.பவஜீ மகேந்திரன் ( கலை)
03. செல்வி.மேரிதர்சிகா செபமாலை முத்து ( கலை)

# 2A C பெற்றவர்

01. செல்வி.வைதேகி பஞ்சாட்சரம் ( கலை)

## க.பொ.த. (உயர்தர)ப் பெறுபேறு 2007 ஆவணி
## பல்கலைக்கழக அனுமதி.

**Maths Stream**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி.ஆரணி சீவரத்தினம் | Engineering (MPR) |
| 02. | செல்வி.டர்மிக்கா இராஜேந்திரா | Earth Resources Engineering |
| 03. | செல்வி.அகல்யா சண்முகநாதன் | Phy.Sc. |
| 04. | செல்வி.சிந்துகா விவேகானந்தம் | Phy. Sc. |
| 05. | செல்வி.பிரசாந்தி சுப்பிரமணியம் | Phy.Sc. |
| 06. | செல்வி.ஜனனி சிவப்பிரகாசம் | Mineral Resources technology |
| 07. | செல்வி.துஸ்யந்தினி சிவராசன் | IT Vavuniya |

**Bio Stream**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி.யசிந்தா அந்தோனிப்பிள்ளை | Medicine |
| 02. | செல்வி.சுகன்யா செல்வானந்தம் | Agri.Sc. |
| 03. | செல்வி.சுபாங்கி ஆனந்தராஜா | Agri.Sc. |
| 04. | செல்வி.சிந்திகா சிவகுமாரன் | Agri.Sc. |
| 05. | செல்வி.மீரா தேவேந்திரன் | MIT |
| 06. | செல்வி.கலைவதனி அரியலிங்கம் | Bio Sc. |
| 07. | செல்வி.தமிழினி தயாளன் | Bio Sc. |
| 08. | செல்வி.அனுஷா உமாபதி | Bio Sc |
| 09. | செல்வி.நித்தியா இராமகிருஸ்ணன் | Siddha Medicine |
| 10. | செல்வி.வித்தியா கங்காதரன் | Siddha Medicine |
| 11. | செல்வி.நவநீதா நவரட்ணம் | Siddha Medicine |

**Commerce Stream**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி.திருமகள் துரைலிங்கம் | Management |
| 02. | செல்வி.சுதர்சினி பாலகிருஸ்ணன் | Enterprenairship & Management |
| 03. | செல்வி.ரம்சிகா ரகுநாதன் | IT for Management Studites |
| 04. | செல்வி.கௌரிகா வரோதயன் | IT for Management St. |
| 05. | செல்வி.கலையரசி இராசரத்தினம் | IT for Management |

**Arts Stream**

01. செல்வி.தர்சினி இராஜதுரை
02. செல்வி.நிரஞ்சினி பரமானந்தராஜா
03. செல்வி.கோகிலவாணி இரத்தினசபாபதிக்குருக்கள்
04. செல்வி.மேரி தர்சிகா செபமாலைமுத்து
05. செல்வி.பவகி மகேந்திரன்
06. செல்வி.தாரகா கனகையா
07. செல்வி.இராஜரங்கா இராஜரட்ணம்

## புலமைப் பரிசில்

பல்கலைக்கழக அனுமதிக்காக முதலாம் தடவை தோற்றி சிறந்த விஞ்ஞான மாணவிக்குரிய இந்திராணி பாஸ்கரன் புலமைப் பரிசு பெறும் மாணவி செல்வி சுகன்யா செல்வானந்தம்..

பழைய மாணவர் சங்கம் வழங்கும் முன்னாள் அதிபர்
தேவமலர் அரியரட்ணம் புலமைப் பரிசு பெறும் மாணவர்கள

| | | |
|---|---|---|
| 1. | செல்வி.மதுஜா கனகசபாநாதன் | 7 |
| 2. | செல்வி.வாசுகி சிவசக்திவேல் | 8 |
| 3. | செல்வி.டயானி மனோகரன் | 9 |
| 4. | செல்வி.சிந்துரா ஸ்ரீரங்கன் | 10 |
| 5. | செல்வி.சுமதி இராஜசுந்தரம் | 11 |
| 6. | செல்வி.வினோஜா அரசரட்ணம் | 12M |
| 7. | செல்வி.தமிழ்ச்செல்வி ஸ்ரீரதரன் | 12B |
| 8. | செல்வி.அபிராமி கணேஸ்வரன் | 12C |
| 9. | செல்வி.யாழினி கதிர்காமலிங்கம் | 12Arts A |
| 10. | செல்வி.யசிந்தா மகாலிங்கம் | 12Arts B |
| 11. | செல்வி.மாதுகி இராஜதுரை | 13B |
| 12. | செல்வி.லாவன்ஜா திருநாவுக்கரசு | 13C |
| 13. | செல்வி.வெண்ணிலா திருநாவுக்கரசு | 13C |
| 14. | செல்வி.நிரோஜா ஜெயபாலன் | 13Arts A |
| 15. | செல்வி.நித்தியா ரவீந்திரன் | 13Arts B |

## கனடா பழைய மாணவர் புலமைப் பரிசு பெறுபவர்கள் விபரம்

- முன்னாள் அதிபர் செல்வி ரோஸ்மேரி சின்னையா ஞாபகார்த்த புலமைப் பரிசில் பெறும் மாணவி செல்வி அகல்யா சண்முகநாதன்.
- முன்னாள் அதிபர் செல்வி மனோரஞ்சிதம் ஆறுமுகம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் பெறும் கலைப் பிரிவு மாணவி செல்வி நிரஞ்சினி பரமானந்தராஜா.

- முன்னாள் அதிபர் செல்வி R.J. Man ஞாபகார்த்த புலமைப்பரிசு பெறும் வர்த்தகப் பிரிவு மாணவி செல்வி திருமகள் துரைலிங்கம்.
- முன்னாள் அதிபர் திருமதி.தேவமலர் அரியரட்ணம் ஞாபகார்த்த கணிதப் பிரிவில் பல்கலைக்கழகம் செல்லும் தேவையுடைய மாணவி எவரும் இல்லை.
- பழைய மாணவி செல்வி T.பெரியதம்பி வழங்கும் சிறந்த விஞ்ஞான மாணவிக்குரிய புலமைப் பரிசில் பெறும் மாணவி செல்வி சுகன்ஜா செல்வானந்தம்.
- முன்னாள் பிரதி அதிபர் செல்வி சுப்பிரமணியத்தின் ஞாபகத்தில் கணித பிரிவில் பரிசு பெறும் மாணவி செல்வி அகல்யா சண்முகநாதன்.
- பல்கலைக்கழக அனுமதி பெற்று கொழும்பு பழைய மாணவர் சங்க புலமைப் பரிசு பெறும் மாணவி செல்வி சுதர்சினி பாலகிருஸ்ணன்
- எம் முன்னாள் ஆசிரியை திருமதி.கிறேஸ்பாக்கிய லட்சுமி ஆழ்வாப்பிள்ளை ஞாபகார்த்த புலமைப் பரிசில் பெறும் மாணவி செல்விதாரகாகனகையா அதனை வழங்குபவர் அவரது புதல்வன் சாம் ஜெயச் செல்வம்.
- எம் முன்னாள் பிரதி அதிபர் செல்வி தனம் வேலுப் பிள்ளை அவர்களின் புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள்

| | | |
|---|---|---|
| 01. | செல்வி.ஜெயசீலா ஜெயசங்கர் | தரம் 7 |
| 02. | செல்வி.ஜனனி திருமால் | தரம் 8 |
| 03. | செல்வி.சசிகலா தேவராஜா | தரம் 9 |
| 04. | செல்வி.சர்மிலா பற்றிக் தோமஸ் | தரம் 10 |
| 05. | செல்வி.சோபினி நித்தியானந்தன் | தரம் 11 |
| 06. | செல்வி.ஜெசிதா ஜெயவீரசிங்கம் | தரம் 12 |

# இணைப் பாடவிதான செயற்பாடுகள்

## விளையாட்டு

எம் பாடசாலையின் விளையாட்டுத்துறைப் பொறுப் பாசிரியை திருமதி.றோ.சிவதாசனின் நெறிப்படுத்தலில் பாட சாலை விளையாட்டுக்குழு வருடாந்த இல்லமெய்வல்லுனர் போட்டிகளை நடாத்தி வருவதுடன் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண மட்டங்களில் நடக்கும் போட்டிகளில் மாணவர் பங்கு கொள்ள உதவி வருகின்றது.

கடந்த வருடம் எம் பாடசாலை உடற்பயிற்சி குழு வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றது. பெருவிளை யாட்டுக்களில்

| **வலைப்பந்து** | **வலய மட்டம்** |
|---|---|
| 15 வயது கீழப் பிரிவு | முதலாம் இடம் |
| 17 வயது கீழப் பிரிவு | இரண்டாம் இடம் |
| 19 வயது கீழ்ப் பிரிவு | இரண்டாம் இடம் |

ஆகிய இடங்களைப் பெற்று மாவட்ட மட்டத்தில் பங்கு கொண்டனர்.

| **கரப்பந்து** | **வலய மட்டம்** | **மாவட்ட மட்டம்** |
|---|---|---|
| 15 வயது கீழ்ப் பிரிவு | முதலாம் இடம் | மூன்றாம் இடம் |
| 17 வயது கீழ்ப் பிரிவு | மூன்றாம் இடம் | – – |

| **பூப்பந்தாட்டம்** | **வலய மட்டம்** | **மாவட்ட மட்டம்** |
|---|---|---|
| 19 வயது கீழப் பிரிவு | முதலாம் இடம் | மூன்றாம் இடம் |

| சதுரங்கம் | வலய மட்டம் | மாவட்ட மட்டம் |
| --- | --- | --- |
| 19 வயது கீழ்ப் பிரிவு | இரண்டாம் இடம் | இரண்டாம் இடம் |

சதுரங்கம் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டும் மாகாண மட்டப் போட்டியில் பங்கு கொள்ளவில்லை.

## மெய்வல்லுநர் போட்டி

13 வயதுக் கீழ் பிரிவு உயரம் பாய்தலில் செல்வி சந்திரிக்கா ஐங்கரதாஸ் கோட்ட. வலய, மாவட்ட மட்டங்களில் முறையே முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

17 வயதுக் கீழ் பிரிவில் செல்வி.சியாமி புவனேந்திரன் நீளம் பாய்தல், குண்டு போடுதல் ஆகிய போட்டிகளில் கோட்ட, வலய மட்டங்களில் முதலாம் இடத்தையும் மாவட்டமட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளார்.

13 வயது கீழ் பிரிவு 4 x 100m ஓட்டப்போட்டியில் கோட்ட, வலய மட்டத்தில் முறையே முதலாமிடத்தையும்மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது. இக்குழுவில் செல்வி நளாயினி ரவிச்சந்திரன், செல்வி சந்திரிக்கா ஐங்கரதாஸ், செல்வி மகிழினி ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி சோபனா வின்சன் டிப்போல், செல்வி சுலக்சஸா குகதாஸன் பங்கு கொண்டனர்.

## மொழித்திறன்

எம் பாடசாலையின் கீழ் பிரிவு மாணவர்களின் ஆங்கில நாடகம் “ மாதன முத்தா” வலய மட்டத்தில் முதலாமிடத்தை யும் மாவட்ட மட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

ஆங்கில ஆக்க இலக்கியத் திறனில் (**Creative writing)** மாவட்ட மட்டத்தில் தரம் 11 மாணவி செல்வி மெக்சி பாரதா சிவசேகரம் மூன்றாமிடத்தையும்

பார்த்து எழுதலில் **(Copy writing)** தரம் 10 மாணவி செல்வி விஜிதா விஜயகுமார் தரம் 12 இல் செல்வி தர்சிகா செந்தில்வேல் முறையே இரண்டாம் இடத்தையும்

சொல்வதெழுதலில் தரம் 8 மாணவியான செல்வி றம்யா இரட்ணராஜா இரண்டாம் இடத்தையும் தரம் 9 செல்வி தபீதா யோகராஜா முதலாமிடத்தையும் பெற்றனர். இவர்கள் மாகாண மட்டப் போட்டியில் பங்கு கொள்ள முடியவில்லை.

எம் பாடசாலையானது தமிழ்த்தினப் போட்டியில் வலய மட்டத்தில்

| | |
|---|---|
| இசைகுழு II | முதலாமிடத்தையும் |
| இசை நாடகம் - “ சத்தியவான் சாவித்திரி ” | முதலாமிடத்தையும் |
| நாட்டிய நாடகம் | இரண்டாமிடத்தையும் |

இலக்கணப் போட்டி பிரிவு iv
செல்வி பிரதீபா தங்கராஜா
பிரிவு v
செல்வி தனுஸ்கா அனந்தீஸ்வரன் முறையே முதலாமிடங் களைப் பெற்றுள்ளனர்.

மாவட்ட மட்டத்தில்

இசை நாடகம் மூன்றாமிடத்தையும்
இலக்கணப் போட்டியில் செல்விஅனந்தீஸ்வரன் தனுஸ்கா மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்..

**M.G..H.S. ICT Unit**

கணித விஞ்ஞானப் போட்டியில் எம் பாடசாலை மாணவிகள் ஆங்கில மொழி மூலத்தில் தோற்றி மாகாண மட்டப் பரிசுகளை வென்றுள்ளனர். கணிதத்தில் தரம் 6 இல் செல்வி லக்ஸனா பாஸ்கரன் மூன்றாமிடத்தையும் விஞ்ஞானத்தில் தரம் 10 இல் யோகினி சிவஞானச் செல்வம் இரண்டாம் இடத்தையும் செல்வி மைதிலி தங்கராஜா இரண்டாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

**Christian Institute of the study of Religion and Society** நடாத்திய யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கட்டுரைப் போட்டியில் தரம் 13 விஞ்ஞானப் பிரிவு மாணவிகளான

செல்வி. தர்சினி குணச்சந்திரன் முதலாமிடம்
செல்வி கார்த்திகா சக்திவேல் இரண்டாம் இடம்
செல்வி கிருஸானி பாலச்சந்திரன் மூன்றாமிடம்
செல்வி பாகினி சிவசுவாமி ஆறுதல் பரிசினையும் பெற்றுள்ளனர்.

யாழ் மாவட்ட தேசிய கலை இலக்கியப் பெருவிழா கட்டுரைப் போட்டியில் சிரேஸ்ட பிரிவில் செல்வி பாகினிசிவசுவாமி இரண்டாமிடத்தையும், இடைநிலைப் பிரிவில் செல்வி ஆர்த்திகா செல்வநாயகம் முதலாமிடத்தையும் பெற்றனர்.

வடமராட்சி Lions Club நடாத்திய கட்டுரைப்போட்டியில் செல்வி சிவராஜினி சிவ அன்பு மூன்றாமிடத்தையும்

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய பொது அறிவுப் போட்டியில்

செல்வி.பிரியங்கா அனந்தீஸ்வரன் முதலாமிடத்தையும்
செல்வி சாம்பவி நாகதேவன் இரண்டாமிடத்தையும்பெற்றுள்ளனர்.

நூலக விழிப்புணர்வு நிறுவனம் நடாத்திய
கட்டுரைப் போட்டியில்
பிரிவு 1 செல்வி சுயனி கிருபாகரன் மூன்றாமிடம்
பிரிவு 2 செல்வி.விஜிந்தினி மோகனதாஸ் இரண்டாமிடத்தையும்

பேச்சுப் போட்டியில்

பிரிவு 1 செல்வி.மதுரா பாலசுப்பிரமணியம் இரண்டாமிடத்தையும்
பிரிவு 2 செல்வி ஜனனி தேவராசா முதலாமிடத்தையும்
பெற்றுள்ளனர்.

க,பொ.த. உயர்தர மன்றம் வழமை போல் கடந்த வருடமும் " **ஒளியை நோக்கி** " 9 ஆவது சஞ்சிகையை வெளியீட்டு மாணவரது திறன் வெளிப்பாட்டுக்கு களம் அமைத்துள்ளது.

## மாகாண மட்ட மென்பொருள் ஆக்கம்

மாகாண மட்ட மென் பொருளாக்கப் போட்டியில் தரம் 9 இல் செல்வி.நிலுக்ஸி புவனேந்திரன், செல்வி அகிலா இராமகிருஸ்ணன் ஆகியோரும் தரம் 13 இல் செல்விவினோபா கனகலிங்கம், செல்வி ஜனனி நாகராஜா ஆகியோரும் பங்கு பற்றி சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்கள். செல்வி.வினோபா கனகலிங்கம் பணப் பரிசினையும் பெற்றுள்ளார்.

## சாரணியம்

எம் பாடசாலை மாணவர் சாரணர் குழு வெள்ளிக்கிழமைகள் தோறும் பயிற்சிகளில் ஈடுபட்டு தம்மை " எப்பொழுதும் தயாராய் இரு " **" Be Prepared "** என்ற மகுட வாக்கியத்திற்கு ஏற்ப தயார்படுத்துகின்றனர். பாடசாலை விழாக்கள் ஏனைய

செயற்பாடுகளில் தம் பூரண ஒத்துழைப்பை வழங்குகின்றனர். இதன் பொறுப்பாசிரியர்கள்

1. செல்வி.கலாமதி தெய்வநாயகம்
2. திருமதி.தங்கேஸ்வரி கிருஸ்ணராசா

## இளம் புத்தாக்குநர் கழகம்

வடமராட்சி வலயத்தில் 8 பாடசாலைகளுடன் இணைந்து எம் பாடசாலை ஒரு மத்திய நிலையமாக செயற்பட்டு மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்த்தெடுத்து ஆராய்வு ஊக்கத்தை தோற்றுவித்துள்ளது.

## நூலகம்

2006 ஆம் ஆண்டு **NECORD** உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட நூலகம் மாணவர்கள் அமைதியாக அமர்ந்து வாசிப்பதற்கு ஏற்ற வகையில் தளபாடங்களைக் கொண்டிராவிடினும் மாணவர் தமக்கு ஓய்வு நேரம் கிடைக்கும் போது முழுமையாகப் பாவிப்பது மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

## தகவல் தொழில்நுட்பக் கழகம் (ICT Club)

பாடசாலைக் கலைத் திட்டத்தில் தகவல் தொழில் நுட்பக் கல்வி 2000 ஆம் ஆண்டிலிருந்து உள்ளடக்கப்பட்டிருந்து மாணவர்களுக்கு கற்றல் செயல்முறைகளுடன் போதிக்கப்பட்டு வருகின்றது. இக் கழகத்தினூடாக மாணவர்கள் மாகாண மட்ட மென்பொருளாக்கப் போட்டியில் பங்கு கொண்டு பணப்பரிசினை

யும் பெற்றுள்ளார்கள். இக் கழகத்தை செல்வி.சி.சண்முகதாஸ் பொறுப்பாக இருந்து செயற்படுத்தி வருகின்றார். ஏனைய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட பாடசாலை இணையத் தளம் (School net) எமக்கும் வழங்கப்பட வேண்டும். எனினும் எமது இலண்டன் பழைய மாணவர் சங்க உறுப்பினரான திருமதி சாந்தி ( செல்வி.சாந்தி சேவற்கொடியோன்) நிதிப் பங்களிப்புடன் கடந்த 185 ஆவது பரிசளிப்பின் போது எமது பாடசாலைக்கு இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை இணையத்தள முகவரி
**www.methodistgirlshighschool.com**
எமது பாடசாலை மின்னஞ்சல் முகவரி
**www.principal@methodistgirlshighschool.com**

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

பாடசாலையின் வளர்ச்சியிலும் அதன் பெருமையிலும் அக்கறை கொண்ட எமது அபிவிருத்திச் சங்கம் கடந்த வருடம் 185 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்கு சிறந்த பங்களிப்பை வழங்கியுள்ளது. செயலாளரும் ஊடகவியலாளருமாகிய திரு. A.N.S திருச்செல்வம் அவர்களின் முயற்சியால் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு 29.06.2007 இல் தினக்குரல் பத்திரிகையில் சிறப்பு மலரும் பிரசுரிக்கப்பட்டது. ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க திரு. T.ஸ்ரீராகவன் அவர்களை நியமித்து கடந்த ஐந்து வருடங்களாக அவருக்குரிய வேதனத்தை வழங்குகின்றது

உயர்பாதுகாப்பு வலயத்தில் இயங்கும் பெண்கள் பாடசாலையின் சிறப்புக்கு கல்விசாரா ஆளணியினரின் தேவை மிக இன்றியமையாதது. எமக்கு 2000 ஆம் ஆண்டிலிருந்து திரு.க.நந்தகுமார் பாடசாலைத் தொழிலாளியாக நியமிக்கப்பட்டு அவருக்குரிய வேதனத்தில் ஒரு பகுதியை சங்கமே வழங்கி வருகின்றது.அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு.நா.குகன் அவர்

களும் வேதனத்தில் ஒரு பகுதியை வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. வருடாந்த விளையாட்டுப் போட்டி,, பரிசளிப்பு விழா போன்றவற்றுக்குரிய நிதியில் ஒரு பகுதியை வழங்குகின்றது. வருடாவருடம் பழைய மாணவர் சங்கத்துடன் இணைந்து ஆசிரியர் தினத்தை சிறப்பாகக் கொண்டாடி வருகின்றது. திரு சாம் ஜெயச் செல்வன் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக தம் தாயாரின் பெயரில் புலமைப் பரிசு ஒன்றை வருடா வருடம் வழங்கி வருகின்றார்..

## பழைய மாணவர் சங்கம்

பாடசாலை அதிபரை தலைவராகக் கொண்ட எம் தாய்ச் சங்கம் எமது ஏனைய பழைய மாணவர் சங்கக் கிளைகளுடன் காலத்திற்கு காலம் சுமுகமான தொடர்புகளை ஏற்படுத்தி எமது தேவைகளை நிறைவு செய்வதில் வகுகிக்கும் பங்கு அளப்பரியது. கனடா பழைய மாணவர் சங்கம் இவ் வருடத்தில் இருந்து காலஞ் சென்ற அதிபர் திருவாட்டி தேவமலர் அரியரத்தினம் அவர்களின்பெயரிலும் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டும் சிறந்த கணித மாணவிக்கு வருடா வருடம் புலமைப் பரிசு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இவருடன் இணைந்து அதிபர்கள் நால்வரினதும் பெயரில் புலமைப் பரிசில்களையும் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு ஒரு பகுதி நிதியையும் வழங்குகின்றது. கடந்தவருடம் இலண்டனிலும் பழை மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவர்கள் எமது பௌதீகத் தேவைகளில் சிலவற்றை நிறைவு செய்வதாக கூறியுள்ளனர். தாய்ச் சங்கம் ஆங்கில ஆசிரியரதும் கல்வி சாரா ஊழியரதும் வேதனத்தை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து வழங்குகின்றது.கிறிஸ்தவ பாட ஆசிரியருக்குரிய வேதனத்தை முழுமையாக வழங்குகின்றது. வாழ்க்கைச் செலவு அதிகரித்த வேளையில் மாணவரது இணைப்பாட செயற்பாடுகளுக்குரிய நிதியினை வழங்குவதன் மூலம் முகாமைத்துவத்தை இலகுபடுத்த எமக்கு உதவுகின்றது.

# முடிவுரை

இன்றைய கால கட்டத்தில் எமது பாடசாலைச் சூழல் காரணமாக அதிபர் தன் முகாமைத்துவக் கருமங்களை வெற்றிகர மாக முன்னெடுக்க பல காரணிகள் தடையாகவுள்ள போதும் எம் பிரதி அதிபர், பிரிவுத் தலைவர்கள், ஆசிரியர்கள் மாணவத் தலைவர்கள் கல்விசாரா ஊழியர்கள் அதிபருக்கு அளிக்கும் அளப்பரிய ஒத்துழைப்பே, எம் மெதடிஸ்த அன்னை பல துன்பங்களைச் சுமந்த நிலையிலும் பல சாதனைகளைப் படைத்திருக்கிறாள் என்றால் மிகையாகாது. ஆசிரியரது வினைத்திறன் மிக்க செயற்பாட்டால் மாணவர் தம் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுஇணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் கோட்டம், வலய, மாவட்ட மட்டம் வரை பங்கு கொண்டு பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக கடந்த வருடம் எம் மாணவர் தம்மை மாகாண மட்டம் வரை செல்லத் தயார்ப்படுத்த முடியவில்லை. எமது நிறுவன வளர்ச்சிக்கு எமது வலயக்கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், கணக்காளர், பாடப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர், பழைய மாணவர் சங்கங்களின் வழிகாட்டலுடனும் ஆலோசனைகளுடனும் பாடசாலை தனது நற்பெயரை தக்க வைத்துள்ளது.

பாடசாலைக் கௌரவம், பாரம்பரியம், ஒழுக்கவிழுமியங் களையும் பேணிப் பாதுகாத்து மாணவர் கல்வி பயிலும் காலத்திலேயே எத்துணை இடர்வரினும் அவர்களுக்குரிய பல்வேறு வசதி வாய்ப்புக்களை வழங்கி அவர்களை ஊக்குவித்து வருகின்றது. இவ் வகையில் எமது பாடசாலைச் சமூகமே எமது மிகப் பெரும் பலமாக எமக்கு அமைந்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் எம் நன்றிகள் உரித்தாகட்டும். எம் அழைப்பை ஏற்று இங்கு முதன்மை

விருந்தினராக கலந்து சிறப்பித்த எமது அரச அதிபர் கௌரவ திரு.கந்தையா கணேஸ் அவர்களுக்கும் அவர் தம் துணைவியாரான எம் பழைய மாணவி திருவாட்டி பரமேஸ்வரி கணேஸ் அவர்களுக்கும் இறுதியாக இப் பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்துக்கொண்டிருக்கும் நிறுவன அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள், ஊழியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள, நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறி விடை பெறுகின்றேன்.

நன்றி வணக்கம்.



## VISION

" Towards excellence in education through quality management"

## MISSION

Creating a conductive academic environment through optimum utilization of school resources in order to enable our school students to achieve a thorough efficiency and subs equently the international standard and thereby producing a pleasurable student population possessing competencies, human values and sense of democratic responsibility to meet the chellenges of the modern society.

M.G..H.S. ICT Unit

பரிசளிப்பு விழா **2007/2008**